# ரெட்டி மலர்

ரூ. 15/-

**REDDY MALAR** ரெட்டி சமூக பல்சுவை மாத இதழ்

நிறுவனர் : "கல்வி காவலர்" கே. ரெங்கராஜன் (KRT)

Vol : 14 மலர் : 14 மார்ச் 2021 March 2021 Issue : 3 மொட்டு : 3


## உத்தமர் ஓமந்தூர் P.ராமசாமி ரெட்டியார் அவர்களின் 126வது பிறந்தநாள் விழா










தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.ராஜா அவர்கள் நலத்திட்ட உதவிகளையும்,
மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களின்
இளவல் திரு.கே.என்.மணிவண்ணன் அவர்கள் ஓபிஆர் குறும்படத்தையும் வெளியிட்டனர்.



**அதிகாரத்தில் இருப்பவர்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதை தன் வாழ்வின் மூலம் செயல்படுத்தி காட்டிய முன்னோடி ஓ.பி.ஆர்.**

முன்னாள் மாநிலத் தலைவர், கல்விக்காவலர்

# ஐயா K.ரெங்கராஜன் (KRT) அவர்களின்
# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**தோற்றம் : 10.03.1934 மறைவு : 01.02.2019**



நீரும் பாரும் உள்ளவரை,
நிலமும் வானும் உள்ளவரை,
ஊரும், உறவும் உள்ளவரை,
உயிரும் உணர்வும் உள்ள வரை,
உன் பேரும் புகழும் நிலைத்திருக்கும்!
மேலும் மேலும் வளர்ந்திருக்கும்,
ரெட்டியார்களின் சிறப்பும் ஓங்கி இருக்கும்!!

---

**என்றும் உங்கள் நினைவுடன்**

ரெட்டி மலர், ரெட்டி இளைஞர் பேரவை மற்றும்
ஓ.பி.ஆர் நினைவு தொண்டு அறக்கட்டளை, சென்னை

# ரெட்டி மலர்

ரெட்டி சமூக பல்சுவை மாத இதழ்

மலர் : 14 மார்ச் 2021 மொட்டு : 3



| | | |
|---|---|---|
| வெளியீட்டாளர் | : | V. செல்வராஜூ |
| ஆசிரியர் | : | D. முத்துராமன் |
| கௌரவ ஆசிரியர் | : | R. புகழேந்திரன் |
| இணை ஆசிரியர்கள் | : | R. அன்பழகன் |
| | | P. ஜனார்த்தனன் |
| துணையாசிரியர்கள் | : | D. மணிவாசகன் |
| | | V. ஜெயக்குமார் |
| சட்ட ஆலோசகர் | : | R. பாபு B.A.,B.L., |

**விற்பனைப்பிரிவு மேலாளர்**

J. ஐயப்பன்

**விற்பனைப்பிரிவு நிர்வாகிகள்**

R. நந்தகுமார்

N. சுந்தரராஜூ

M. ஜெயபிரகாஷ்

**விளம்பரப்பிரிவு மேலாளர்**

P. மோகன்

**விளம்பரப்பிரிவு நிர்வாகிகள்**

S. காமராஜ்

R. பார்த்திபன்

S. பூவேந்தரசு

**ஆலோசனைக் குழு**

L. தமிழரசன், சென்னை

திருமதி.தேவிமோகன்

S. மோகன், கோவை

N. பெரியசாமி, திருச்சி

R.V. செல்வகுமார், விளாத்திகுளம்

R. சண்முகைய்யா, RSR சிவகாசி

P. தாமோதரன், தாம்பரம்

S. பாலமுருகன், சென்னை

T. ரவிச்சந்திரன், விழுப்புரம்

R.D. ராஜமுருகன், விருதுநகர்

S. சதீஷ்குமார், மதுரை (மோனிகா)

S. ராமராஜன், திண்டுக்கல்


## உள்ளே.....


| | | |
|---|---|---|
| ஆசிரியர் பக்கம் | — | 4 |
| ஓபிஆர் பிறந்தநாள் விழா | — | 5–7 |
| சட்டப்பேரவையில் ஓபிஆர் படம் | — | 8 |
| மாணவர் பக்கம் | — | 9 |
| விவசாயப்பகுதி | — | 10 |
| ஆன்மீகப்பகுதி | — | 11 |
| மகளிர் தினச்செய்தி | — | 12 |
| சங்கச்செய்திகள் | — | 13–14 |
| சுவையான செய்திகள் | — | 15 |
| மருத்துவப்பகுதி | — | 16 |
| தலைவர் மடல் | — | 17 |
| ரெட்டி மகளிர் பிரிவு மடல் | — | 18 |
| நன்றி! நன்றி!! நன்றி!!! | — | 19 |
| 10% இடஒதுக்கீடு பற்றிய செய்தி | — | 20 |
| திருமணத்தகவல்கள் | — | 21–33 |
| விளம்பரப்பகுதி | — | 34 |


**“உன் வாழ்நாளில் ஒருவரின் உயிரைக் காப்பாற்றவோ அல்லது அவர் வாழ்க்கையை மேம்படுத்தவோ உன்னால் முடியும் என்றால் ஒரு மனிதனாகப் பிறந்ததற்கு அர்த்தம் உண்டு”**

ரெட்டி மலரில் வெளிவரும் கட்டுரைகள் பற்றி வாசகர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. கருத்துக்கள் பத்துவரிகளுக்கு மிகாமல் அஞ்சல் அட்டையில் எழுதி பிரதி மாதம் 25ம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பவும்.

**ஆசிரியர்**


## அலுவலக முகவரி :

**எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு,**
**ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.**
**044 -2485 3333, 9688877700.**
**E-mail Id : reddymalar06@gmail.com,**
**Website : www.reddymalar.com,**
**Twitter : @malar_reddy.twitter.com**
**Matrimony Online Website : www.reddymatrimony.co.in**

# தலையங்கம்

**அன்பார்ந்த சொந்தங்களுக்கு வணக்கம்,**

**'ரெட்டிமலர்'** ஒவ்வொரு ரெட்டியாரின் உணர்வையும் உள்ளக்குமுறலையும் ஒவ்வொரு வாசகர்களின் எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் பிரதிபலிப்பதுடன் நின்று விடாமல் சமுதாய ஒற்றுமை, உறவுகளிடையே பரஸ்பரம் நட்பு, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, சமுதாய வளர்ச்சி என்ற கொள்கைகளை வலியுறுத்தி செயல்பட்டு வருகிறது. இனியும் இந்த கொள்கையில் தொடர்ந்து பயணிக்கும்.

அண்மையில் மத்திய அரசால் நடைமுறைபடுத்தப் பட்டுள்ள 10% இட ஒதுக்கீடு விஷயத்தில் ரெட்டியார்கள் தங்கள் வேலைப்பளு மற்றும் வேறுவிதச்சிந்தனைச் சிதறல்களால் தாம் அறிய வேண்டியவற்றை அறியாமலும், கவனிக்க வேண்டியவற்றை கவனிக்காமலும், பெற வேண்டிய உரிமைகளை பெற்றுக் கொள்ளாமலும், தம்மை ஏமாற்று வதை தாம் உணராமலும் இருக்கிறார்கள். அதற் கான விழிப்புணர்வு செய்தி.....

எந்த இடஒதுக்கீட்டு பிரிவிலும் வராத பொருளா தாரத்தில் பின்தங்கிய பொதுப்பிரிவினருக்கு மத்திய அரசு 10% இடஒதுக்கீட்டை வழங்கியிருக்கிறது. உயர்சாதி ஏழைகள் பலன்பெறும் வகையில், மத்திய அரசு பாராளுமன்றத்தில் 124வது அரசியல் அமைப்பு சட்டத்திருத்த மசோதாவை கொண்டு வந்து கடந்த 14.01.2019 முதல் இந்தியா முழுவதும் அதனை அமல்படுத்தி உள்ளது. இச்சட்டம் ரெட்டி கஞ்சம் சாதி சான்றிதழ் பெற முடியாதவர்கள் அல்லது சாதி சான்றிதழ் பெற்றவர்கள் அனைவருக்கும் இது பலனளிக்கும் என்பதாலும் இச்சட்டம் நமக்கு கிடைத்த வரப்பிரசாதம் என்பதாலும் இதனை நாம் மகிழ்ச்சியோடு வரவேற்போம்.

உயர்சாதி என்கிற அடிப்படையில் ஓ.சி [O.C] என சில உட்பிரிவினர் அழைக்கப்படுகிறார்கள். இவர் களில் உள்ள ஏழைகள் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு பெற முடியாமல் பலரும் தவித்து வருகின்றனர். இந்த பிரிவில் உள்ள ஏழைகள் மத்திய அரசு அறிவித்துள்ள 10% இடஒதுக்கீட்டை எதிர்பார்த்து காத்திருக் கின்றனர். இது விஷயத்தில் தமிழக அரசு முன்னுக்கு பின் முரணான அறிவிப்பை வெளியிட்டது. இது மிகவும் வேதனைக்குரிய செய்தியாகும். மேலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை என சாதி சான்றிதழ் யாருக்கும் வழங்கக்கூடாது என எந்த விதமான காரணமும் கூறாமல் கடந்த 04.06.2020 அன்று தமிழக அரசு சுற்றறிக்கையை வெளியிட்டது. அதனை திரும்ப பெற வேண்டி மூன்று மாநில ரெட்டி நலச்சங்கம் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. அதன் பின்னர்தான் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கான சுற் றறிக்கையை (EWS) தமிழக அரசு கடந்த 09.07.2020 அன்று திரும்பப்பெற்றது. ஆண்டுக்கு எட்டு லட்சத்திற்கும் கீழ் வருமானம் உள்ளவர்களும், 5 ஏக்கருக்கும் குறைவாக வேளாண் நிலம் வைத்திருப்பவர்களும் இந்த இட ஒதுக்கீட்டை பெற தகுதியானவர்கள். இந்த சட்டத்தை அமல் படுத்தாமல் தமிழக அரசு செயல்படுவது நமக்கு அச்சத்தை உருவாக்கியுள்ளது.

தமிழகத்தில் 10 சதவீத இடஒதுக்கீட்டை அமல் படுத்த வலியுறுத்தி ரெட்டியார், நாஞ்சில் நாட்டு வேளாளர், நாயர், நெல்லை, கும்பகோணம் சைவ பிள்ளை, முதலியார், நாயுடு, காற்காத்த வெள்ளாளர், ஐயர், ஐயங்கார் உள்ளிட்ட 94 சமூக அமைப்புகளோடு சேர்ந்து அவரவர் சார்ந்திருக்கும் அமைப்பின் மூலம் தனித்தனியே மனு அளித்து வருகின்றனர். இதனை வலியுறுத்தி ரெட்டி இளைஞர் பேரவையும், ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளையும் தமிழக அரசுக்கு கடிதம் வழங்கியது. இதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறோம் என தமிழக அரசு ஓபிஆர் அறக்கட்டளைக்கு பதில் கடிதம் அனுப்பி உள்ளது.

நடைமுறையில் பழங்குடியின பிரிவில் இருக்கும் கொண்டரெட்டி, கொண்டகாப்பு மக்களுக்கான சாதி சான்றிதழ் பிரச்சனையும், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம்பெற்றுள்ள ரெட்டி கஞ்சம் பிரிவு மக்களுக்குரிய சாதி சான்றிதழும் சரியாக வழங்கப்படவில்லை. ரெட்டி கஞ்சம் பிரிவை OBC பட்டியலில் சேர்க்காததால் இடஒதுக்கீட்டுக்கான முழு பயனையும் நாம் இன்னும் அடையவில்லை என இளைஞர்கள் பெரும் விரக்தியில் உள்ளனர்.

இந்நிலையில், பொருளாதாரத்தில் நலிவடைந்த பொதுப்பிரிவில் உள்ளவர்களுக்கு 10 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் விவகாரம் தமிழக அரசியல் களத்தில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது. 10 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக கம்யூனிஸ்ட், காங்கிரஸ், பாஜக, தமிழ் மாநில காங்கிரஸ், புதிய தமிழகம் உள்ளிட்ட கட்சிகள் ஆதரித்தும், திமுக, அதிமுக, மக்கள் நீதி மைய்யம், நாம் தமிழர், விசிக, மதிமுக உள்ளிட்ட கட்சிகள் எதிரான கருத்துக் களையும் தெரிவித்து வருகின்றன. இந்த மசோதா குறித்து மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் துறை அமைச்சர் தாவர்சந்த் கெலாட் பேசும் போது இச்சட்டத்தினால் SC, ST மற்றும் OBC பிரிவினருக்கு அளிக்கப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டுக்கு எந்த பாதிப்பும் இல்லை என விளக்கம் அளித்தார். இருந்தும் தமிழகத்தில் இச்சட்டம் அமல் படுத்தபடவில்லை. இதனை வென்றெடுக்க நம் சமுதாய அமைப்புகள் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்.

இதர சமுதாயங்கள் எல்லாம் இவ்விஷயத்தில் ஒற்றுமை எண்ணம் கொண்டு பொங்கி எழுந்து கொண்டிருக்கும் வேலையில் நாம் மட்டும் உணர்ச்சி குன்றியிருப்பதை காணச்சகியாது ரெட்டியார்களை தட்டியெழுப்பும் முன்னணி வீரனாக இளைஞர்கள் செயல்பட முன்வர வேண்டும். இதனை மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கும் நோக்கத்துடன் ரெட்டி மலர் இனி தொடர்ந்து செயல்படும். இவ்விஷயத்தில் வெற்றியை நோக்கி வீறு நடைபோடுவோம். இது நமது உரிமைக்காக நாம் நடத்தும் போராட்டம்.

D. **முத்துராமன்**, ஆசிரியர்

# “The PREMIER OPR” குறும்பட வெளியீடு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா




உத்தமர் ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார் அவர்களின் 126வது பிறந்தநாள் விழா கடந்த 01.02.2021 திங்கட்கிழமை சென்னையை அடுத்த தாம்பரம் நகரில் உள்ள டிஜிபி திருமண மண்டபத்தில் ஓபிஆர் நினைவு தொண்டு அறக்கட்டளையின் சார்பில் நடைப்பெற்றது. அது சமயம் “The PREMIER OPR” என்னும் குறும்படம் வெளியிடப்பட்டது. நிகழ்ச்சிக்கு அறக்கட்டளையின் நிர்வாகி முடிச்சூர் திரு.பா.தாமோதரன் அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்களாக தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.ராஜா அவர்களும், மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களின் இளவல் திரு.கே.என்.மணிவண்ணன் அவர்களும் கலந்து கொண்டு ஓபிஆர் குறும்படத்தை வெளியிட்டும், ஏழை மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் சிறப்பித்தனர். நிகழ்ச்சிகள் திருமதி.சரிகா ரெட்டி அவர்களின் பரதநாட்டிய நிகழ்ச்சியுடன் தொடங்கியது.

நிகழ்ச்சியில் தாம்பரம் நகரமன்ற முன்னாள் துணைத்தலைவர் திரு.D.காமராஜ், முன்னாள் நகரமன்ற உறுப்பினர்கள் திரு.T.R.கோபி, திரு.S.ராஜேந்திரன், திரு.T.R.முரளி (எ) கிருஷ்ணமூர்த்தி, பெருங்களத்தூர் திரு.கார்த்திக், தச்சூர் திரு.ராஜா, திருவள்ளூர் மாவட்ட கவுன்சிலர் திருமதி.கீதாஅரசு, மண்ணச்சநல்லூர் ஒன்றிய கவுன்சிலர் திருமதி.வளர்மதி சின்ராஜ், துறையூர் தாலுகா தலைவர் திரு.K.R.ரவி மற்றும் வடசென்னை மாவட்ட ரெட்டி நலச்சங்க தலைவர் திரு.S.பாலமுருகன், பாடி, கொரட்டூர் ரெட்டி நலச்சங்க செயலாளர் திரு.J.ஐயப்பன், தஞ்சை மண்டல முன்னாள் செயலாளர் திரு.K.சூரியக்குமார், Dr.N.S.ராம்சுந்தர், தாம்பரம் திரு.பாலகிருஷ்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலரும் பெருந்திரளாக கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஓபிஆர் நினைவு தொண்டு அறக்கட்டளை மற்றும் ரெட்டி இளைஞர் பேரவையின் நிர்வாகிகள் திரு.V.செல்வராஜூ, திரு.S.ரவீந்திர ரெட்டி, திருமதி.தேவிமோகன், MRL திரு.P.மோகன், சின்னப்பண்ணை திரு.S.மோகன், Dr.J.அருண்குமார், திரு.D.மணிவாசகன், திரு.V.ஜெயக்குமார், திரு.M.ஜெயப்பிரகாஷ், திரு.N.செல்வராஜ், திரு.N.சுந்தர்ராஜ் உள்ளிட்டோர் சிறப்பாக செய்திருந்தனர்.

நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளை வழங்கி தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.ராஜா



அவர்கள் பேசும்போது, “இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருக்கும் அருமை சகோதரர் திரு.V.செல்வராஜூ அவர்களை ஏறத்தாழ 25 ஆண்டு காலமாக நான் நன்கு அறிந்தவன். அவரின் சமூகத்தொண்டையும், ஆர்வத்தையும் பாராட்டுகின்றேன். நம் சமுதாயத்தில் பல்வேறு பத்திரிக்கைகள் அவ்வப்போது வருகிறது. என்னுடைய விருப்பமும், ஆசையும் என்னவென்றால் விரைவில் ரெட்டிமலர் பத்திரிக்கை தொடர்ந்து வெளிவர வேண்டும். தரமான செய்திகளை தாங்கி வரும் ரெட்டிமலர் பத்திரிக்கை நாம் பாதுகாக்க வேண்டிய பெட்டகம். அது அவசியம் விரைவில் வெளிவரவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இன்று நடைபெறுகிற இந்த ஓபிஆர் பிறந்த நாள் விழாவும், அவர் வாழ்வில் நடந்த சில சம்பவங்கள் குறித்த குறும்பட வெளியீடும் நம் அனைவருக்கும் உற்சாகத்தையும், சமுதாய உணர்வையும் மேலும் தூண்டும் வகையில் அமைந்திருக்கிறது. ஓபிஆர் என்ற மாபெரும் தலைவர், தான் கொண்ட கொள்கையில் தளராத பிடிப்பு, கலங்கமற்ற அரசியல் நடைமுறை,

அதிகார விளிம்பிற்குள்ளேயே நின்று செயல்படும் ஆளுமைத்தன்மை, மக்களால் வழங்கப்படும் பதவியின் பெயரால் செய்யப்படும் அனைத்துச்செயல்களும் நாட்டின்



வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும் பயன்பட வேண்டும் என்ற அவரது பொதுநோக்கு இவை அனைத்தும் ஒருங்கே பெற்ற கறைபடாதக் கரத்தினராக ஓ.பி.ஆர் வாழ்ந்தார் என்பதே மக்களின் தீர்ப்பு. எதிர் கட்சித்தலைவர்களும், தொண்டர்களும் கூட இவரைக் கறைப்படாக்கரத்தினர் என்று ஒப்புக்கொண்டிருக் கிறார்கள் அவரது நேர்மையால், உண்மையான தொண்டால் இன்றும் மக்கள் மனங்களில் ஓ.பி.ஆர் வாழ்ந்துகொண்டிருக்கிறார். அத்தகையவரின் உயர்ந்த பண்புகளை இன்றைய இளம் தலைமுறையினருக்கும், மாற்று சமுதாயத்தவர்களுக்கும் கொண்டு சேர்க்கும் இந்த குறும்படம் வரவேற்புக்கும், வாழ்த்துக்கும், பாராட்டுக்கு முரியது. மேலும் அறக்கட்டளையின் மூலம் இன்று வழங்குகின்ற நலத்திட்ட உதவிகள் பிற சமுதாயத்தவரும் பாராட்டுகின்ற வகையில் செயல்பாட்டை அமைத்த ஓபிஆர் நினைவு தொண்டு அறக்கட்டளைக்கு எனது பாராட்டுக்கள்” என்றார்.

ஓபிஆர் நினைவு தொண்டு அறக்கட்டளையின் நிர்வாகி முடிச்சூர் திரு.பா.தாமோதரன் அவர்கள் பேசும்



போது “இந்த அறக்கட்டளை மிகக்குறுகிய காலத்தில் தன் சேவையின் மூலம் மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பையும், பாராட்டையும் பெற்று வருகிறது. குறிப்பாக கொரோனா காலத்தில் அறக்கட்டளையின் பணிகள் நம் சமுதாயத்தின் பெருமையை மேலும் உயர்த்தும் வகையில் செயல்பட்டதை நாம் அனைவரும் அறிவோம். ஓபிஆரின் இந்த 126வது பிறந்தநாள் நிகழ்ச்சி களை தாம்பரத்தில் கொண்டாட வாய்ப்பளித்த அறக் கட்டளைக்கு இந்த பகுதி மக்களின் சார்பில் முதலில் மகிழ்ச்சியை தெரிவித்துக்கொள்கிறேன். நிகழ்ச்சியின் போது நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு பயனாளிகளை தேர்வு செய்யும் பொறுப்பையும் எனக்கு வழங்கிய அறக் கட்டளையின் நிர்வாகத்திற்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். மிகமிக அவசியமான தருணங்களில் மட்டுமே ஓமந்தூரார் பத்திரிக்கையாளர்களைச் சந்தித்தார். தனிப்பட்ட பேட்டிகள், புகைப்படம் எடுப்பது போன்ற எதற்கும் அவரிடம் எளிதில் அனுமதி வாங்கவே முடியாது. அதனாலேயே அவரின் புகைப்படம் ஒன்றிரண்டு மட்டுமே இன்று நமக்கு கிடைக்கின்றன. அவற்றில் ஒன்றை 1998ல் முதன் முதலில் தாம்பரம் நகரில் தான் வெளியிடப்பட்டது. அதேபோல இன்று அவரது வாழ்க்கையில் நடந்த சில சம்பவங்கள் குறித்த குறும்படத்தையும் இங்கு வெளியிட்டு இருப்பது எங்களுக்கு மேலும் உற்சாகத்தை அளிக்கிறது. இதே போன்று நல்ல செயல்கள் எப்போது செய்தாலும் எங்கள் பகுதி மக்கள் என்றென்றும் உறுதுணையாக இருப்போம்” என்றார்.

ஓபிஆர் நினைவு தொண்டு அறக்கட்டளையின் நிர்வாகி திரு.V.செல்வராஜூ அவர்கள் பேசும்போது, “ஓபிஆர் அவர்களின் நேர்மை, எளிமை, ஆளுமை இவை அனைத்தையும் பறைசாற்றும் வகையிலும், பாமர மக்களும் எளிதில் அறிந்துகொள்ளும் வகையிலும் இன்று “The PREMIER OPR” என்னும் குறும்படம் மிகக் குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப் பட்டு இருக்கிறது. இதற்கான முயற்சியை மேற்கொள்ள என்னை ஊக்கப்படுத்திய அறக்கட்டளையின் அறங்காவலர்களுக்கும், ரெட்டி இளைஞர் பேரவை நிர்வாகிகளுக்கும் முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதில் ஓபிஆராக நடித்தும், இயக்கியும் இருக்கின்ற, திரு.S.ராஜகுமாரன் அவர்களையும் இப்படத்திற்கு முழுமையாக நிதியுதவி வழங்கிய திருமதி.தேவிமோகன் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி. இந்த குறும்படம் அரசியலில் உள்ளவர்கள் எப்படி நடக்கவேண்டும் என்பதற்கு ஓர் சிறந்த உதாரணம் ஓபிஆர். நேர்மையின் பிறப்பிடம், அரசியல் வரலாற்றின் தாய் அவர். பல அரிய ஆக்கப்பூர்வமான சாதனைகளின் கருவூல மாக இருந்தவர் என்பதுதான் சிறப்பு. நேர்மையான அரசியல் தலைவர்களைக் காண்பதை அரிதாகக் கருதும் காலக்கட்டத்தில் நாம் வாழ்ந்தாலும், வரலாற்றில் நேர்மை மாறாமல் வாழ்ந்த ஓமந்தூராரை எண்ணி மகிழ்வோம்.

மேலும் இன்று காலை மறைந்த நம் முன்னாள் மாநிலத்தலைவர் ஐயா KRT அவர்களின் நினைவாக,



அவர்களின் கொள்கைகளை விளக்கும் வகையில் 4 இடங்களில் பாடி–கொரட்டூர், ஜாபர்கான்பேட்டை, பல்லா–வரம், முடிச்சூர் உள்ளிட்ட பகுதிகளில் அந்தந்த கிளைச் சங்க நிர்வாகிகளின் உதவிகளோடு அன்னதானம் வழங்கப்பட்டது. பொதுவாழ்வில் வெகுசிலர் மட்டுமே மறைந்தும் நினைவுக்கூறப்படுவர். அவர்களில் நிச்சயமாக OPRஐப் போல KRTயும் ஒருவர். அவர் நினைவாக KRT கேரியர் அகாடமியினை தொடங்கி அறக்கட்டளையின் சார்பில் கல்விப்பணிகளை செயல்படுத்தி வருகிறோம். கொரோனா காலக்கட்டத்தில் ஆன்லைன் மூலம் மாணவ,




மாணவிகள் கல்விப்பயில கைப்பேசியும், இன்று 10 ஏழைப் மாணவர்களுக்கு கல்வி உதவியும் வழங்கியிருக்கிறோம். மேலும் KRT கேரியர் அகாடமியின் மூலம் டிஎன்பிஎஸ்சி தேர்வு எழுத விருப்பம் உள்ள மாணவர்களை ஊக்கப் படுத்திடவும், பயிற்சி வழங்கிடவும் அறக்கட்டளையின் நிர்வாகம் தயாராக இருக்கிறது. இதனை தமிழகத்தில் உள்ள அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என இந்த நல்ல தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்” என்றார்.

ஓபிஆர் நினைவு தொண்டு அறக்கட்டளையின் நிர்வாகி திரு.S.ரவீந்திரரெட்டி அவர்கள் பேசும் போது, ஓபிஆர் அவர்களது பிறந்ததினத்தையும், ஐயா KRT அவர்களின் நினைவு தின நிகழ்ச்சியையும் ரெட்டி இளைஞர் பேரவையும், ஓபிஆர் நினைவு தொண்டு அறக்கட்டளையும் நடத்திக்கொண்டு இருப்பது எங்களுக்கு கிடைத்த பாக்கியமாக கருதுகிறோம். இனி இதுப்போன்ற நிகழ்வுகள் தமிழகம் முழுவதும்



நடத்தவேண்டும். அந்த நாட்களில் இந்த இருபெரும் தலைவர்களின் எளிமை, திறமை, அவர்களின் ஆளுமை அதன் மூலம் இந்த சமுதாயத்திற்கு கிடைத்த பெருமைகளை அனைவரிடத்திலும் எடுத்துச் சொல்ல வேண்டும். மேலும் ஏழைகளுக்கு உதவிய அந்தத் தலைவர்களின் வழிக்காட்டுதலை ஏற்று நலத்திட்ட உதவிகளை இயன்றவரை அனைவருக்கும் செய்ய வேண்டும். இதுதான் அந்த தலைவர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான மரியாதையாகும்” என்றார்.

தாம்பரம் நகரமன்ற முன்னாள் உறுப்பினர் திரு.T.R.கோபி பேசும்போது, “எங்கள் பகுதியில் ஓபிஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளையின் மூலம் நலத் திட்ட உதவிகளை வழங்கிடவும், ஓபிஆர் குறும்படத்தை வெளியிடவும் முடிவெடுத்த அறக்கட்டளைக்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பிற அமைப்புகளை போல் அல்லாமல் மற்றவர்களுக்கெல்லாம் உதாரணமாக செயல்பட்டு வருகின்ற அமைப்பு இது என சொல்லுவதில் எனக்கு சிறுதயக்கமும் இல்லை. இதுப்போன்ற நிகழ்வுகள் தமிழகம் முழுவதும் நிகழ்த்துவதின் மூலம் ரெட்டியார் சமுதாயத்திற்கு மேலும் பெருமைகள் வந்து சேரும். அந்த வகையில் முன்னெடுத்துச் செல்லுகிற எந்த செயலுக்கும் தாம்பரம் பகுதியை சேர்ந்த எங்கள் மக்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். குறிப்பாக கொரோனா காலத்தில் இந்த அமைப்பு செய்த உதவிகள் அனைத்தும் பிற சமுதாயத்தவரும் பாராட்டும் வகையில் இருந்ததை என் காது குளிர கேட்டது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை தந்தது. எனவே ஓபிஆர் அறக்கட்டளையின் இந்த சேவை மேலும் வளரட்டும் என பாராட்டுகிறேன் என்றார்”.

ஓபிஆர் நினைவு தொண்டு அறக்கட்டளையின் அறங்காவலர் திரு.M.ஜெயப்பிரகாஷ் அவர்கள் நன்றி தெரிவித்து பேசும்போது, “ஓபிஆர் குறித்து மிக குறுகிய காலத்தில் ஒரு குறும்படத்தை தயாரித்து வெளியிட்ட தயாரிப்பாளர் அண்ணன் திரு.V.செல்வராஜு



அவர்களுக்கும், இதற்கு முழு ஊக்கத்தையும், தைரியத்தையும், நிதியுதவியையும் வழங்கிய திருமதி.தேவிமோகன் அவர்களுக்கும் குறும்படத்தில் நடித்த திரு.S.ராஜகுமாரன் உள்ளிட்ட நடிகர்கள், தொழிற்நுட்பக்கலைஞர்கள் அனைவருக்கும் அறக் கட்டளையின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இதனை தாம்பரம் பகுதியில் வெளியிடவும், இதற்கான முழு பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு சிறப்பாக செய்து முடித்த திரு.பா.தாமோதரன் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினர்களாக கலந்துக்கொண்டு நலத்திட்ட



உதவிகளை வழங்கிய தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.ராஜா அவர்களுக்கும், OPR குறும்படத்தை பொத்தானை அழுத்தி உலக மக்கள் அனைவரும் காணும்படி வெளியிட்ட மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களின் இளவல் திரு.கே.என்.மணிவண்ணன் அவர்களுக்கும், பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து சிறப்பித்த சங்க நிர்வாகி களுக்கும், ஊடகத்துறையினருக்கும், நிகழ்ச்சி நடத்த மண்டபம் வழங்கிய உரிமையாளருக்கும், ஸ்நேக்ஸ், கேக், டீ, தண்ணீர் உள்ளிட்ட சிற்றுண்டியை வழங்கிய நன்கொடையாளர்களுக்கும், அன்னதானம் வழங்கிட பேருதவி செய்த நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார்.

# தமிழக சட்டபேரவையில் ஓ.பி.ராமசாமி ரெட்டியார் படம்



சட்டசபையில் வ.உ.சி, சுப்பராயன், ஓ.பி.ராமசாமி ரெட்டியார் ஆகியோரின் உருவப்படங்களை 23 பிப்ரவரி 2021 அன்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்.

## தலைவர்கள் படங்கள்

நாட்டுக்காக சேவை செய்த தலைவர்களை கவுரவிக்கும் வகையில், தமிழக சட்டசபை கூட்ட அரங்கில் அவர்களது படங்கள் வைக்கப்பட்டுள்ளன. முதல் முதலில் 1948ம் ஆண்டு ஜூலை 24ந் தேதி மகாத்மா காந்தியின் உருவப்படம் தமிழக சட்டசபையில் திறக்கப்பட்டது. அடுத்த ஒரு மாதத்தில் ராஜாஜியின் உருவப்படத்தை அப்போது பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு திறந்து வைத்தார்.

அதன்பிறகு, 1964ம் ஆண்டு மார்ச் மாதம் 22ந் தேதி திருவள்ளுவரின் படத்தை, துணை ஜனாதிபதியாக இருந்த ஜாகீர் உசேன் திறந்து வைத்தார். 1969ம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் அண்ணாவின் உருவப் படத்தை அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி திறந்து வைத்தார். அ.தி.மு.க ஆட்சி காலத்தில் எம்.ஜி.ஆர் முதல்அமைச்சராக இருந்தபோது, 5 தலைவர்களின் உருவப்படங்கள் சட்டசபையில் திறக்கப்பட்டது. 1977–ம் ஆண்டு ஆகஸ்டு 18ந் தேதி, காமராஜரின் உருவப் படத்தை அப்போதைய ஜனாதிபதி நீலம் சஞ்சீவ் ரெட்டி திறந்துவைத்தார்.

1980ம் ஆண்டு ஆகஸ்டு 9ந்தேதி, ஒரே நேரத்தில் பெரியார், அம்பேத்கர், முத்துராமலிங்கதேவர், காயிதேமில்லத், முகமது இஸ்மாயில் ஆகியோரின் புகைப்படங்களை அப்போதைய கேரள மாநில கவர்னர் ஜோதி வெங்கடாசலம் திறந்து வைத்தார்.

அதன்பிறகு, ஜெயலலிதா முதலமைச்சராக பொறுப்பேற்ற போது, 1992–ம் ஆண்டு ஜனவரி 31ந்தேதி முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் உருவப்படம் திறக்கப்பட்டது. இதை ஜெயலலிதா திறந்து வைத்தார். 2018ம் ஆண்டு பிப்ரவரி 11–ந்தேதி, முன்னாள் முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் உருவப்படத்தை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி திறந்து வைத்தார். கடந்த ஆண்டு ஜூலை 19–ந் தேதி ராமசாமிபடையாச்சி யாரின் படத்தை எடப்பாடி பழனிசாமி திறந்து வைத்தார். இவ்வாறு 12 தலைவர்களின் உருவப்படங்கள் சட்ட சபையில் இடம்பெற்றுள்ளன.

## எடப்பாடி பழனிசாமி திறந்துவைத்தார்

இந்த நிலையில், கடந்த ஆண்டு சிவகங்கை மாவட்டத்தில் நடந்த விழாவில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் பேசும்போது சட்டசபையில் வ.உ.சிதம்பரனார், ப.சுப்பராயன், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் உள்ளிட்டோரின் படங்கள் திறக்கப்படும் என அறிவித்தார்.

அதன்படி 23ம் தேதி இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட அன்று வ.உ.சிதம்பரனார், ப.சுப்பராயன், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் ஆகியோரின் உருவப் படங்களை சட்டசபை மண்டபத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அவர்கள்திறந்து வைத்தார். இதற்கு ஒட்டுமொத்த ரெட்டியார் சமுதாய மக்கள் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். இதற்கு உறு துணையாக இருந்த துணை முதல்வர் மாண்புமிகு ஓபிஎஸ் அவர்களுக்கும், செய்தித்துறை அமைச்சர் மாண்புமிகு கடம்பூர் ராஜூ அவர்களுக்கும், விளாத்திக்குளம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு P.சின்னப்பன் அவர்களுக்கும் நன்றி! நன்றி!! நன்றி!!!

**நன்றியுடன்**

**ரெட்டி மலர், ரெட்டி இளைஞர் பேரவை மற்றும்**
**ஓ.பி.ஆர் நினைவு தொண்டு அறக்கட்டளை, சென்னை**

# வாய்ப்புக்களை வசப்படுத்துங்கள் – மாணவர் பகுதி



நமக்குத் தெரிந்த சில படிப்புகள், சில நுழைவுத் தேர்வுகள். இவையே உலகம் என்று நினைப்பதே பல பிரச்சனைகளுக்குக்காரணம். எத்தனையோ வாய்ப்புகள் நம் கண்ணுக்குத் தெரியாமல், கைகளுக்கு முன்னாள் காத்துக் கிடக்கின்றன.

“மருத்துவப் படிப்பென்றால் எம்பிபிஎஸ், பிடிஎஸ் மட்டும் தான்” என்று பலர் கருதுகிறார்கள். ஆனால் மருத்துவம் சார்ந்த பல நூறு படிப்புகள் இருக்கின்றன.

“நர்சிங், பிசியோதெரபி, ஆக்குபேஷனல்தெரபி, கார்டியாக் டெக்னாலஜி, கிரிட்டிக்கல்கேர் டெக்னாலஜி, நியூக்ளியர் மெடிசின் டெக்னாலஜி என மருத்துவம் சார்ந்த ஏராளமான பட்டப்படிப்புகள் இருக்கின்றன. இந்தப் படிப்புகளை முடித்தவர்கள், அதிகப்பட்சம் 5 ஆண்டுகளில் மிகச் சிறந்த இடத்தில் அமரமுடியும். இந்தியாவின் முக்கிய மருத்துவத் தலை நகரமாக சென்னை, கோவை போன்ற நகரங்கள் வளர்ந்து வருகின்றன. அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளோடு ஒப்பிடும்போது, இந்தியாவில் மருத்துவச் செலவு குறைவு. வெளிநாடு களில் இருந்து மருத்துவச்சுற்றுலா வருவோரின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. மருத்துவம் சார்ந்த பட்டப்படிப்புகளை முடிப்போருக்கு கைநிறைய சம்பளத்தில் உடனடியாக வேலை கிடைக்கும்...” என்கிறார் கல்வியாளர் ராஜாராஜன்.

நீட் தேர்வு மட்டுமல்ல... எம்.பி.பி.எஸ் படிப்புக்கு அகில இந்திய அளவில் மேலும் இரண்டு நுழைவுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன.இந்தியா முழுவதுமுள்ள எய்ம்ஸ் (AIIMS - All India Institute of Midical Sciences) மருத்துவக் கல்லூரிகளில் படிப்பதற்காக ஒரு தேர்வு நடத்தப்படும். பாண்டிச்சேரியிலும், காரைக்காலிலும் உள்ள ஜிப்மர் (JIPMER) மருத்துவக் கல்வி நிறுவனத்தில் சேர தனி நுழைவுத்தேர்வு நடத்தப்படும்.

தமிழகத்தில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி களில் மத்தியத் தொகுப்புக்கான 15 சதவிகித இடங்கள் போக மீதமிருக்கும் இடங்கள், பிளஸ்டூ மதிப்பெண் அடிப்படையிலேயே நிரப்பப்படும். அதே சமயம், தமிழகக் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் நீங்கலாக, மத்தியத்தொகுப்புக்கு வழங்கும் 15 சதவிகித இடங்களில் மாணவர்களைச் சேர்க்கவும், இந்தியா முழுவதும் உள்ள மத்திய அரசின் கால்நடை மருத்துக் கல்வி நிறுவனங்களில் B.V.Sc படிக்கவும், All India Pre Veterinary Test என்ற அகில இந்திய நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது.பிளஸ்டூவில் இயற்பியல், வேதியியல், உயிரியல் பாடங்களில் தேர்ச்சி பெற்றவர்கள் இந்தத் தேர்வை எழுதலாம். மருத்துவத்தை விட்டால் மாணவர்களின் அடுத்த தேர்வு பொறியியல் தான். மெக்கானிக்கல், சிவில், எலெக்ட்ரிக்கல், எலெக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர் சயின்ஸ் இவை தான் பெரும்பாலான மாணவர்களின் தேர்வாக இருக்கிறது. இவற்றைக்கடந்து தேர்வு செய்ய தமிழகத்தில் 80 பொறியியல் பாடப்பிரிவுகள் உண்டு.

பொறியியலில், குறிப்பிட்ட ஒரு படிப்புக்குத் தான் எதிர்காலம் என்று சொல்வதும் தவறு. சிவில், மெக்கானிக்கல் முதல் மைனிங் இன்ஜினீயரிங், ஏரோநாட்டிக்கல் வரை எல்லாப் படிப்புகளுக்கும் எதிர்காலம் உண்டு. பொறியியல் துறை பிரமாண்டமாக வளர்ந்து கொண்டேதான் இருக்கும். பத்தாண்டுகளுக்கு முன்பு தொழில்நுட்பம் இந்த அளவுக்கு வளரும் என்று யாரும் கற்பனை கூட செய்திருக்க மாட்டார்கள். இன்று ஒரு கடல் போல அது விரிந்துவிட்டது. அதனால், பொறியியலில் எந்தப் படிப்பு படித்தாலும் வாய்ப்புகளுக்குக் குறையில்லை.

இந்தியாவிலும் பிற நாடுகளிலும் சுரங்கத்தொழில் உச்சம் பெற்று வருகிறது. அதனால் இந்தச் சூழலில் மைனிங் இஞ்ஜினீயரிங் படிப்பைத் தேர்வு செய்வது நல்லது. ஆனால் அந்தப் பணிச்சூழலைத் தெரிந்துக் கொண்டு படிப்பைத் தேர்வு செய்ய வேண்டும். இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி, கம்ப்யூட்டர் சயின்ஸ் படிப்புகளுக்கு எக்காலமும் தேவையிருக்கும். இந்தப் படிப்புகளை முடிக்கும் அறிவார்ந்த ஒருவர், முதலீடே இல்லாமல் வெறும் ஐடியாக்களை மட்டுமே கொண்டு முன்னுக்கு வரமுடியும்.

இன்று கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயலதிகாரியாக இருக்கிற சுந்தர்பிச்சை, படித்தது மெட்டலர்ஜிக்கல் இன்ஜினீயரிங்கும், மெட்டீரியல் சயின்ஸம். கூகுளுக்கு சிஇஓ ஆகவேண்டும் என்ற இலக்கோடு அவர் படிக்கவில்லை. ஆனால், ஆர்வத்தோடும், தீவிரத்தோடும் படித்தார். எல்லாத் துறைகளிலும் அறிவை வளர்த்துக் கொண்டார். அதேப் போல, ரிசர்வ் வங்கியின் கவர்னராக இருந்த ரகுராம்ராஜன், டெல்லி ஐ.ஐ.டியில் எலெக்ட்ரிக்கல் இன்ஜினீயரிங் படித்தவர். பொறியியல் படிக்கும் போது ரிசர்வ் வங்கியின் கவர்னராக வேண்டும் என்பது அவரது இலக்கில்லை. வளர்த்துக் கொண்ட திறமையும், தேடலுமே அவர்களை உரிய இடத்தில் கொண்டு சேர்த்தது...” என்கிறார் கல்வியாளர் நெடுஞ்செழியன்.

காந்திநகர் ஐ.ஐ.டியில் M.Sc in Cognitive Science என்ற ஒரு படிப்பு இருக்கிறது. பி.ஏ, பி.எஸ்.சி, பி.டெக், பி.காம் படித்த எவரும் இந்தப் படிப்பில் சேரலாம். மாதமாதம் 5000 ரூபாய் உதவித்தொகை தருகிறார்கள். வெளி நாட்டில் போய் படிக்க 60 ஆயிரம் பணம் தருகிறார்கள். ஆனால் யாரும் இந்தப் படிப்பைச் சீண்டுவதேயில்லை. இது மாதிரி இந்தியாவில் உள்ள கல்வி நிறுவனங்களில் நூற்றுக்கணக்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

டேராடூனில் உள்ள இந்திய ராணுவக்கல்லூரி, கேரளா, எழில்மலாவில் உள்ள இந்திய கடற்படைக் கல்லூரி, ஐதராபாத்தில் உள்ள விமானப்படைக் கல்லூரிகளில் இளநிலை அறிவியல், தொழில்நுட்பப்படிப்புகளை முடித்து நேரடியாக ராணுவ அதிகாரியாக பணியில் இணைவதற்காக NDA (National Defense Academy) என்ற நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது. இத்தேர்வில் தேர்ச்சி பெறுபவர்களின் கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்ளும். பிளஸ்டூவில் கணிதம், இயற்பியல், வேதியியல் படித்தவர்கள் இக்கல்லூரிகளில் சேரலாம். சேர்க்கை அறிவிப்பு பிளஸ்டூ தேர்வு முடிவுகள் வெளியான பிறகு வரும்.

மும்பையில் உள்ள ஜெம்மாலஜிக்கல் இன்ஸ்டிட்யூட் ஆப் இந்தியா என்ற நிறுவனம் ஜெம்மாலஜி துறையில் பட்டம் மற்றும் பட்டயப்படிப்புகளை வழங்குகிறது. இங்கு பட்டம் பெறுபவர்கள் லண்டன் ஜெம்மாலஜிக்கல் அசோசியேஷன் நடத்தும் உலகளாவிய தேர்வில் பங்கேற்று சர்வதேச அளவில் வேலை பெறலாம்.

நிகழ்காலத்தை யார்? சரியாகப் பயன்படுத்துகிறார்களோ அவர்களுக்குத் தான் எதிர்காலம் சிறப்பாக அமையும். கனவுகளை விசாலமாக்கிக்களத்தில் இறங்குங்கள். காலம் உங்கள் கரத்துக்குக் கட்டுப்படும்!

# விவசாயமே நமது ஜீவநாடி

இந்தியா ஒரு விவசாய நாடு இந்தியாவில் 70 சதவீதம் மக்களின் உணவு உடை போன்ற அடிப்படை தேவைகளை நிறைவேற்றவும் அவர்களின் பொருளாதார காரணியாகவும் உள்ளது விவசாயமே!

துரதிருஷ்டவசமாக இந்திய தலைவர்கள், ஆட்சியாளர்கள் விவசாயத்திற்கு முக்கியம் கொடுத்து திட்டங்களை நிறைவேற்றாமல் தொழில் துறை வளர்ச்சிக்கான திட்டங்களை நிறைவேற்ற முன்னுரிமை கொடுத்து கடந்த காலங்களில் செயல்பட்டு வந்ததால் இந்திய விவசாயம் நலிந்து விட்டது!



விவசாயத்திற்கான அரசின் கவனிப்பு இல்லாததாலும் நீர் தேவைகள் போன்ற பாசன வசதி கிட்டாததாலும் உரம் மருந்துகள் விதைகள் போன்றவற்றை வாங்கி விவசாயம் செய்து லாபம் கிடைக்காததாலும் விவசாயிகள் கடந்த காலங்களில் லட்சக்கணக்கில் தற்கொலை செய்துள்ளனர்!

இது ஒருபுறம் இருக்க குதிரை கீழே தள்ளியதும் இல்லாமல் குழியும் பறிக்கும் செயலாக மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளிடம் இருக்கும் நிலங்களை எடுத்து தொழிற்சாலைகள் கட்டவும் சாலைகள் அமைக்கவும் இன்ன பிற தேவைகளுக்கு வழங்கவும் செய்து வருகிறது!

விளைநிலங்களை அரசு எடுக்கும் போது அதற்கு நிவாரணமாக இழப்பீடாக கொடுக்கும் பணம் மிகவும் குறைவாக இருப்பதுடன் சமயங்களில் இழப்பீடு வாங்குவதற்கு நிலத்தை பறிகொடுத்த விவசாயிகள் படும் கஷ்டம் சொல்லத்தரமற்றதாக இருக்கிறது.

இவ்வாறு பொதுமக்களிடமும் விவசாயிகளிடமும் இருந்து எடுக்கப்பட்ட நிலங்களை தனியார்களின் தொழிற்சாலைகள் அமைக்க பன்னாட்டு கம்பெனி களின் பெரும் தொழிலதிபர்களுக்கு வழங்கும் அரசு மேலும் அவர்களுக்கு கோடிக்கணக்கில் தொழிற் கடன் கொடுத்து ஏற்றுமதி இறக்குமதி சலுகைகள் கொடுத்து, சலுகை விலையில் தடங்கலில்லாத மின்சாரம் பிற தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்து வருகிறது!

இத்தனை சலுகைகளைப்பெற்று தொழில் தொடங்கும் பெரும் முதலாளிகள் அரசுக்கு அல்வா கொடுத்து கொள்ளை லாபம் அடிகின்றனர் தொழிற் சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு போதிய ஊதியம் வழங்குவதில்லை போதிய வசதிகளை செய்வதில்லை.


நிரந்தர தொழிலாளர்களாக சிலரை வைத்து கொண்டு ஆயிரக்கணக்கில் தினக்கூலி பணியாளர் களாக வைத்து அவர்களது உழைப்பையும் சுரண்டி வருகின்றன இவை களை அறிந்திருந்தும் மத்திய மாநில அரசுகள் அத்தகைய தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுப்பதில்லை.

இது ஒருபுறம் இருக்க விவசாய நிலங்களை அரசுகள் மூலம் பெற்ற தொழில் அதிபர்கள் தாங்கள் பெற்ற நிலத்தில் பெரும்பகுதியை எந்தவித பயனும் இன்றி தரிசாக வைத்தும் ஒன்றுக்கும் உதவாத செயல்களுக்கு பயன்படுத்தியும் வருவதையும் காண முடிகிறது.

இவைகளைத் தெரிந்தும் கூட இந்திய அரசு தொடர்ந்து தொழில் நிறுவனங்களுக்கு நிலங்களை வழங்குவதற்கு முனைப்பு காட்டுகிறது. ஒட்டுமொத்த விவசாயிகளிடம் இருக்கும் நிலங்களை பறிப்பதற்கு முனைப்பு காட்டுகிறது. ஒட்டுமொத்த விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பறித்து அவர்களை நடுத்தெருவில் நிறுத்தும் மத்திய அரசின் எண்ணத்தையே தற்போது கொண்டு வரவிருக்கும் நில எடுப்பு சட்ட மசோதா வெளிப்படுத்துகிறது.

நில எடுப்பு சட்ட மசோதாவிற்கு மாநில அரசுகள் காட்டும் எதிர்ப்பு என்பது தங்களது அதிகார குறைப்பு பற்றியதாக உள்ளதே தவிர விவசாயிகளின் எதிர்காலம் குறித்த கவலையாக இல்லை என்பதை பார்க்க முடியாது.

சுற்றுசூழலை மாசுபடுத்தி இந்திய விவசாயிகளின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் தொழில் நிறுவனங்கள் எத்தனை வந்தாலும் இந்தியா தொழில் சார்ந்த நாடாக முடியாது. விவசாயமும் அது சார்ந்த தொழில்களுமே இந்தியாவை வளர்ச்சியடைய செய்யும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வேலை இல்லா பிரச்சனையையும் தீர்க்கும் என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.



அடுத்த இதழில்......

**வீ.செல்வராஜு** அவர்கள் எழுதும்

**உத்தமர் ஓமந்தூரார் வாழ்க்கை தொடர்**



**இனிய நடை! அரிய தகவல்கள்!!**
**ஒவ்வொருவரும் படித்து பயன்பெறத்தக்க**
**வரலாற்று தொடர்!!!**

விவரங்களுக்கு,

**"ரெட்டிமலர்"**

34A, கங்கையம்மன் கோயில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600083.

## ஆன்மீகச் செய்தி





ஒரு காலத்தில், பெற்றவர்களை தெய்வத்துக்கு சமமாக எல்லா குடும்பங்களிலும் கருதினர். அவர்களின் பேச்சை, நீதிபதியின் உத்தரவாக மதித்து நடந்தனர். காலம் செல்ல செல்ல பெற்றவர்களை மதிக்கும்போக்கு குறைந்தது.

குறிப்பாக திருமணத்துக்குப் பின், பெற்றவர்களை அவமதிக்கவோ, வெறுக்கவோ, ஒதுக்கவோ வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாயினர்.

பெற்றோர் மரணித்தபின், அவர்களுக்கு செய்த அவமரியாதையை நினைத்து கலங்கினர். தெய்வமாகி விட்ட அவர்களுக்கு மரியாதை செய்வோம் என கருதினர். இதற்காக ஏற்படுத்தப்பட்டதுதான் தர்ப்பணம்.

தர்ப்பணம் என்ற சொல்லுக்கு, திருப்தி செய்வது என பொருள்.

குறிப்பாக ஆடி, தை மாத அமாவாசைகளில் செய்யும் தர்ப்பணம், விசேஷமானது. ஆடியில் தன் நண்பன் சந்திரனின் வீடான, கடக ராசிக்கு சூரியன் வருகிறார். சந்திரனும், சூரியனும் அப்போது இணைகின்றனர். இவர்கள் இணையும் நாளே அமாவாசை.

தை மாதத்தில், சூரியன், தன் மகன் சனியின் வீடான மகர ராசிக்கு வருகிறார். அதே வீட்டில் சந்திரனும் இணைவார்.

அப்போது, சூரியன், பிதுர்காரகன் [அப்பாஸ்தானம்] என்றும், சந்திரன், மாத்ருகாரகன் [அம்மாஸ்தானம்] எனவும் பெயர் பெறுவர். அம்மாவும், அப்பாவும் இணைந்திருக்கும் வேளையில் தர்ப்பணம் செய்வது, மிகுந்த பலன் தரும்.

தன் அம்மாவான சாயாதேவியை ஒதுக்கி விட்டதால், சனிக்கும், அவரது அப்பா சூரியனுக்கும் சண்டை, இதனால் அவர்கள் ஜென்மப் பகைவர்கள் ஆயினர்.

இருந்தாலும், சூரியன் மகரத்தில் நுழையும் தை மாதத்தில் அவர்கள் சேர்ந்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனவே, சூரிய, சந்திரர் மகரத்திற்குள் நுழையும் தை அமாவாசை மிகுந்த முக்கியத்துவம் பெற்றது.

பிதுர்காரகனான சூரியன், தன் பிள்ளை வீட்டில் இருக்கும் காலத்தில், தங்கள் முன்னோருக்கு செய்யும் தர்ப்பணம், சிரார்த்தம் முதலியன முக்கியத்துவம் பெறுகின்றன.

எல்லா சிவாலயங்களிலும், சனி பகவான், தெற்கு நோக்கி தனி சன்னிதியிலும், சூரியன், மேற்கு நோக்கி தனி சன்னிதியிலும் இருப்பர். சண்டைக்காரர்களான இவர்களால், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளும் வாய்ப்பு இல்லை.

நவக்கிரக மண்டபத்தில், சூரியன் கிழக்காகவும், சனி மேற்காகவும் எதிரும், புதிருமாக இருப்பர். தை மாதத்தில் இவர்கள் ஒரே வீட்டில் இணைகின்றனர் இல்லையா....

இதன் அடிப்படையில், எதிரிகளான இவர்களை இணைத்து வைத்து, சன்னிதி உருவாக்க வேண்டுமென, ஒரு மன்னன் நினைத்தான். அதன் அடிப்படையில் கும்பகோணம், சோமேஸ்வரர் கோவிலில், சன்னிதி உருவாக்கப்பட்டது.

இங்கே இருவரும் இணைந்து காட்சி தருகின்றனர். இதே போல, சந்திரனும், சனியும் இணைந்துள்ள சன்னிதி, கும்பகோணம்–மன்னார்குடி சாலையில் 5 கி.மீ. தொலைவில், சாக்கோட்டையில் அமிர்தகலச நாதர் கோவிலில் உருவாக்கப்பட்டது.

தை அமாவாசையன்று இந்த கோவில்களுக்கு வந்து, இவர்களைத் தரிசித்தால், பெற்றோர், பிள்ளைகள் உறவு வளரும் என்பதுடன், முன்னோர் ஆசியும் கிடைக்கும் என்பது அனைவரின் நம்பிக்கை.

## பயனுள்ள மருத்துவ குறிப்புகள்

1. சோற்றுக் கற்றாழையின் நடுப்பகுதியைப் பிளந்து அதன் கசப்பான சாற்றை மோரில் கலந்து தினம்தோறும் உண்டு வந்தால் அல்சர் போன்ற நோய்கள் குணமாகும். மேலும் உடலில் இளமைத் தன்மை அதிகரிக்கும்.
2. தினம்தோறும் ஒரு நெல்லிக்காய் சாப்பிட்டு வந்தால் நாள்பட்ட தோல் நோய்கள் குணமாகும். நோய் எதிர்ப்பு சக்தி உடலில் அதிகரிப்பதுடன் முகப்பொலிவும் உண்டாகும்.
3. சர்க்கரை நோய் கட்டுப்பட வெந்தயத்தை அரைத்து தினம்தோறும் ஒரு கரண்டி சுடுநீரில் கலந்து சாப்பிட்டு வரவேண்டும்.
4. இரத்த கொதிப்பு நோய் குணமாக இரண்டு அல்லது மூன்று நாளைக்கு ஒருமுறை அகத்திக்கீரையை உணவில் சேர்க்க குணம் ஏற்படும்.

# பெண்ணின் பெருமையைப் போற்றும்

## உலக மகளிர் தினம் – மார்ச் 8



தாயின் கருவில் அணு துடித்துப் பிரிந்து எட்டின் கூறாகி இடங் கொள்ளும் அணு குழந்தையாக உருவாகிறது.

"உள்ளமே பெருங்கோவில்
ஊன் உடம்பே ஆலயம்"
எனக் கூறுகிறது திருமந்திரம்

ஆலயமான உடம்பில்
கருவறையைக்
கொண்டு இருப்பவள் பெண்.

"பெண்ணிற்குள் ஞானம் வைத்தான்
உயிர் பேணி வளர்த்திடும் ஈசன்"
என்றார் மகாகவி பாரதி

ஒவ்வொரு பெண்ணிற்குள்ளும் பாரதசக்தியின் அம்சத்தைக் காண்பதாக பாரதியார் கூறுகிறார்.

"எங்கெங்கு காணினும் சக்தியடா

ஏழுகடல் அவள் வண்ணமடா" என்கிறார் பாரதிதாசன். மேலும் இவர் பெண்ணை குடும்ப விளக்கு என்கிறார்.

சிந்துசமவெளி நாகரீக காலத்திலும் பெண்களை "சிவசக்தி" வடிவமாக வழிபட்டதையும் "இயற்கை அன்னை" என பெயரிட்டதையும் வரலாறு கூறுகிறது.

"ஒரு மான் மழுவும் சிறுகூன் பிறையும்
சடைவார் குழலும் இடை வாகனமும்
கொண்ட நாயகனின் இடப்பாகத்திலே
நின்ற நாயகியே மலைமா மகளே"

என ஆதிசங்கரர் தன்னுடைய 'சௌந்தர்ய லஹரி'யில் பெண்ணிற்கு இறைவனே தன்னில் பாதியைத் தந்ததாகக் கூறுகிறார்.

குலதெய்வ வழிபாடு குடும்ப மேன்மையைக் கொடுக்கும் எனக் கருதி ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஓர் பெண் தெய்வம் ஏற்படுத்தி வழிபாடு செய்யப் பழக்கப் படுத்தினர் நம் முன்னோர்.

காப்பியங்களும் பெண்களையே மையமாகக் கொண்டு சித்தரிக்கப்பட்டுள்ளதை படிக்கிறோம். சங்க காலத்தில் கவிபாடி மூவேந்தர்களையும் ஒன்று படுத்திய பெருமை ஔவை மூதாட்டியையே சாரும். முதல் இந்திய விடுதலைப்போரில் ஆணுடைத் தரித்தவர், ஆங்கிலேயரை எதிர்த்தவர், வீரப் பெண்மணி ஜான்சிராணி இலக்குமிபாய் இத்தகையப் பெருமைப்பொருந்திய பெண்ணினம் மறுமலர்ச்சிப் பெறபாடுபட்டவர். பெண்களின் விடிவெள்ளியாகத் தோன்றி விடியலைத் தோற்றுவித்தவர் இராஜாராம் மோகன்ராய் அவர்கள்.

'பெண் என்றால் பேணுவாள்" என்பது விளங்க பெண்கள் தன்னையும் காத்து, தன் குடும்பத்தை, தனது தேசத்தையும் காத்து வந்ததை வழிவழியாகக் காண்கிறோம். வீர சிவாஜிக்கு வீர வரலாற்றுக் கதை களைக் கூறி வளர்த்தவர் அவரது அன்னை ஜீஜாபாய். உலகம் போற்றும் உத்தமர் காந்தியடிகளை தில்லையாடி வள்ளியம்மையின் தீரமே ஈர்த்து விடுதலை உணர்வை ஊட்டியது.

ஐ.நா. சபையில் பாடிய பெண் எம்.எஸ். சுப்புலட்சுமி. இவரின் இசைக்கு நான் அடிமைசாசனம் எழுதித் தருகிறேன் என நேரு அவர்கள் பெண்ணை பெருமைப்படுத்தியதுடன் தன் மகளுக்கு பல விஷயங்களைப் போதித்து கடிதம் எழுதி ஊக்குவித்தும் அன்னை இந்திரா இந்தியாவின் இரும்பு பெண்மணியாக புகழ் சேர்த்ததையும் நாம் அறிவோம்.

தந்தை பெரியாருக்கு நாகம்மையார் நல்ல துணைவியாகி விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதும், கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு சிறை சென்றதையும் காண்கிறோம். பெண்ணடிமையை ஒழித்து, பெண்கள் அரசாங்கப் பணி, இராணுவம், காவல்துறை, ஆட்சி நிர்வாகம் ஆகியவற்றில் இடம்பெற வேண்டும் என்ற பெரியாரின் கனவை நனவாக்கி காட்டியவர் உத்தமர் ஓமந்தூரார்.

திக்கற்ற பெண்களுக்கு ஔவை இல்லம் தொடங்கி மறுமலர்ச்சி ஏற்படுத்திய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியை காந்தியடிகள் பாராட்டியதை நாம் அறிவோம். சமூக சேவையிலும் பெண்கள் சளைத்தவர்களல்லர் என்பதற்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கியது நம் பெருமை.

அயல் நாட்டில் பிறந்து நம் நாட்டிற்கு ஆசிரியப் பணி செய்ய வந்தவர், தொழுநோயாளிகளின் தோழியாய் விளங்கிய அன்னை தெரசா அகிலமே போற்றும் அன்னையாகி பெண்ணினத்திற்கு பெருமை சேர்த்தார்.

இந்திய விடுதலையில் நேதாஜியின் இந்திய தேசிய இராணுவப்படையில் தளபதியாக பணியாற் றியவர் கேப்டன் லட்சுமி அம்மாள். தமிழகத்தில் நாடகங்கள் மூலம் நாட்டுப் பற்றை வளர்த்து, சுதந்திர உணர்வைத் தூண்டியவர் மதுரை ஜானகி அம்மா. கடலூர் அஞ்சலையம்மாள் விடுதலை வீரர்களுக்குக் காவல்துறை வாசலிலே உணவு சமைத்துக் கொடுத்தார்.

இவர்களின் வீரமும், தீரமும் பெண்களுக்கு என்றும் ஊக்கம் தருவதாக உள்ளதை உணர்கிறோம். விண்ணிலும் பெண்களால் சாதிக்க முடியும் என்பதை கொலம்பியா விண்கலத்தில் பறந்து சாதித்தவர் கல்பனா சாவ்லா.

நாட்டு விடுதலையுடன், பெண்கள் விடுதலைக் கும்மிப் பாடல்கள் பாடியவர் பாரதியார்.

"பட்டங்கள் ஆளவும், சட்டங்கள் செய்யவும்
பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்"

என பாரதியும், பல பெரியோர்களும் பெண்களை உயர்த்த வேண்டிப் போராடியதையும் உணர்ந்து பெண்மையைப் போற்றுவோமாக.

**மகளிர் தின வாழ்த்துக்கள்.**

# கிராமியம் Dr.P.நாராயணன் வாரிய உறுப்பினராக நியமனம்



கிராமியம் Dr.P.நாராயணன் அவர்கள் தேசிய காடு வளர்ப்பு மற்றும் சுற்றுசூழல் வளர்ச்சி வாரிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

குளித்தலையை இருப்பிடமாக கொண்டு சமூக சேவை ஆற்றி வரும் Dr.P.நாராயணன் அவர்கள் கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் தாலுகாவில் உள்ள கனகபிள்ளையூர் கிராமத்தில் போலம்ம ரெட்டியார்–வீரம்மாள் ஆகியோருக்கு மகனாக 1949 ஆகஸ்ட் 11 அன்று விவசாய குடும்பத்தில் பிறந்தார். M.A.,D.Litt.,படித்த இவர் PhD., பட்டத்தை 2003ம் ஆண்டு ஸ்ரீலங்காவில் உள்ள கொழும்பு பல்கலைக்கழகத்தில் மனித சேவையில் இலக்கிய முனைவர் பட்டமும், 2006ம் ஆண்டு சமூக சேவைக்கான முனைவர் பட்டமும் பெற்றவர்.

இளம்பருவம் முதலே சமூக சேவையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். கிராமப்புற மக்களின் மேம்பாட்டில் மிகுந்த அக்கறை கொண்ட இவர் ஏழைகளின் துயர் துடைக்கவும், நாட்டு நலப் பணி–களில் ஆர்வத்துடன் செயல்பட்டார். தமிழக முன்னாள் முதல்வர் மறைந்த K.காமராஜ், முன்னாள் ஜனாதிபதி திருமதி.பிரதீபாபாட்டீல்



உள்ளிட்ட பல தலைவர்களிடம் பேரன்பும், மதிப்பும் கொண்டிருந்தவர். சிறந்த சமூக சேவைக்கான விருதினை 2010 ஆண்டு தென்னாப்பிரிக்காவின் முதல் குடியரசு தலைவர் திரு.நெல்சன் மண்டேலா அவர்களது பெயரிலான விருதினை பெற்றவர். தமிழக முன்னாள் மேதகு ஆளுநர் திரு.ரோசைய்யா அவர்களிடம் சிறந்த சமூக சேவைக்கான விருதினை பெற்றவர்.

மேலும் அரசு துறையில் உயர் அதிகாரிகள் பலரிடமும் நெருக்கமான நட்புக் கொண்டு இருந்த மையால் கிராமப்புற ஏழை மக்களின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் இவர் பல நலத்திட்டங்களை கரூர் மாவட்டத்தின் பல்வேறு கிராமபுறங்களில் செயல்படுத்தினார்.மேலும் திரு.P.நாராயணன் சமூக அங்கீகாரங்களை பல்வேறு துறைகளில் பெற்றவர். ஆதிதிராவிடர் நலத்துறையின் விழிப்புணர்வு கமிட்டி உறுப்பின ராகவும், கரூர் மாவட்டத்தில்



சுகாதாரத்துறையில் காசநோய் பிரிவிற்கென உள்ள கண்காணிப்புக்குழுவில் உறுப்பினராகவும், விவசாயத் துறையில் கரூர் மாவட்ட உணவு பாதுகாப்பு இயக்கக் குழு உறுப்பினராகவும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் (DRDA) கண்காணிப்பு குழு உறுப்பினராகவும், தமிழ்நாடு பஞ்சாயத்ராஜ் பிரச்சாரக் குழு உறுப்பினராகவும், ஜவுளித்துறையில் பணிபுரியும் பெண்களுக்கு எதிரான பாலியல் விவகாரங்களை கவனிக்கும் கண்காணிப்பு குழுவில் தொழிலாளர் நலத்துறை இவரை செயற்குழு உறுப்பினராக நியமித்துள்ளது.

இந்தியாவில் கிராமப்புற அரசு சாரா அமைப்பின் கூட்டமைப்பில் தமிழ்நாடு மண்டல ஒருங்கிணைப்பாளராக செயல்படுபவர். தன்னார்வ அமைப்பில் தமிழ்நாடு கூட்டமைப்பின் மாநில புரவலராகவும் பொறுப்பு வகிப்பவர். உலகளாவிய மனித உரிமை அமைப்பில் மாநில புரவலராகவும், கரூர் மாவட்ட பாதுகாப்பு குழு உறுப்பினராகவும், கரூர் மாவட்டத்தில் குழந்தைகள் பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் என பல்வேறு பொறுப்புக்களை வகித்துவரும் இவர், “நீருள்ள குளத்தைத்தேடி தவளைகளும், தடாகத்தைத் தேடி அன்னப் பறவை களும் தாமாகவே வருவதைப்போல், முயற்சியையும் உயர்ந்த குறிக்கோளையும் உடையவனைத்தேடி இன்பமும், புகழும் வந்து சேரும் என்ற ஜப்பானிய பழமொழிக்கு ஏற்ப இவருக்கு பல்வேறு பதவிகள் தேடி வருகின்றன. தற்போது இந்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் இவரை தேசிய காடு வளர்ப்பு மற்றும் சுற்றுசூழல் வளர்ச்சி வாரிய உறுப்பினராக நியமினம் செய்துள்ளது.

இந்த நியமனப்பதவி பாராளுமன்ற உறுப்பினருக்கு சமமான அந்தஸ்து கொண்டது. இந்த பதவியின் மூலம் மேலும் பல சேவைகளை செய்து நாட்டிற்கும், பிறந்த நம் ரெட்டி சமூகத்திற்கும் பெருமை சேர்க்க ரெட்டி மலரும், ரெட்டி இளைஞர் பேரவையும், ரெட்டி சமூகத்தின் சார்பில் வாழ்த்துகிறது.

**பிழைக்கத் தெரியாதவர்கள் என்று பழிக்கப்படுபவர்களால் தான் இந்த உலகம் பிழைத்துக் கொண்டிருக்கிறது.**

# திருச்சி மராச்சி சுப்புராமன் பத்மஸ்ரீ விருதுக்கு தேர்வு



ஆண்டுதோறும் பல்வேறு துறைகளில் சாதனைபுரிந்தவர்களுக்கு மத்திய அரசு உயரிய விருதான பத்மஸ்ரீ, பத்மபூஷன், பத்மவிபூஷன் விருதுகளை வழங்கி கவுரவப்படுத்தி வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டிற்கான பத்மஸ்ரீ விருதுகளை மத்திய அரசு அறிவித்துள்ளது. பத்மஸ்ரீ விருதிற்கென அறிவிக்கப்பட்டுள்ள 102 பேரில் 10 பேர் தமிழகத்தை சேர்ந்தவர்கள்.

திருச்சியில் சமூக ஆர்வலராக செயல்பட்டு வரும் சிறந்த சமூக சேவகர் கிராம சுகாதார செயற்பாட்டாளர் ஸ்கோப் திரு. மராச்சி சுப்புராமன் ரெட்டியார் அவர்களுக்கு இந்திய அரசின் உயரிய பத்மஸ்ரீ விருது 2021ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு வழங்கப்பட உள்ளது.

இந்தியாவில் ஏறக்குறைய பாதி வீடுகளில் கழிப்பறை வசதி இல்லை. சுகாதாரம் குறித்த அடிப்படை விஷயத்தில் இன்னமும் நாம் பின் தங்கியே இருக்கிறோம். கிராமப்புறங்களில் உள்ள மக்களிடம் இன்னும் கழிப்பறைக் குறித்த விழிப்புணர்வு சென்று சேரவில்லை. இந்தியாவில் உள்ள 25 லட்சம் கிராமங்களில் வெறும் 25 ஆயிரம் கிராமங்களில் மட்டும்தான் தற்போது கழிப்பறை வசதி உள்ளது. எஞ்சிய கிராமங்களில் மக்கள் திறந்தவெளியை பயன்படுத்துகின்றனர். இதனை போக்கிட மத்திய அரசு தீவிர ஆலோசனை செய்து திட்டங்களை தீட்டி வருகிறது. சுகாதார விழிப்புணர்வையும், கிராமப்புறங்களில் கழிப்பறை வசதிகளையும் திருச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சிறப்பாக அமைத்தமைக்காக இந்தியாவின் உயரிய விருதான பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்ததான விரிவான செய்தியை அவருக்கு விருது வழங்கிய நாளில் நம் பத்திரிக்கையில் வெளிவரும்.

பல சேவைகளை செய்து பெருமை சேர்க்க ரெட்டி மலரும், ரெட்டி இளைஞர் பேரவையும், ரெட்டி சமூகத்தின் சார்பில் வாழ்த்துகிறது.

## வயலூர் ரோடு சங்கத்தில் KRT அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்ச்சி



திருச்சி மாவட்டம் வயலூர் ரோடு ரெட்டி நலச்சங்கத்தின் சார்பில் மறைந்த முன்னாள் தமிழ்நாடு ரெட்டி நலச்சங்க மாநிலத்தலைவரும், திருச்சி மாவட்ட தலைவருமான கல்விக்காவலர் ஐயா கே.ரங்கராஜன் (KRT) அவர்களின் நினைவு தின நிகழ்ச்சி வயலூர் ரோடு கீதா நகர் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சங்கத் தலைவர் Dr.R.ராஜகோபாலன் அவர்கள் தலைமை தாங்கினார். சங்கச்செயலாளர் திரு.C.ராஜேந்திரன் மற்றும் பொருளாளர் திரு.P.ஜனார்த்தனம் உள்ளிட்ட நிர்வாகிகள் நிகழ்ச்சிக்கான சிறப்பான ஏற்பாட்டை செய்திருந்தனர். நிகழ்ச்சியின் போது ஐயா KRT அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப் பட்டது.

நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டு மறைந்த ஐயா KRTயின் நினைவுகளை நினைவுக்கூர்ந்து திரு.P.ஜனார்த்தனம் அவர்கள் பேசும் போது, “ஐயா KRT அவர்கள் உழைப்பால் உயர்ந்தவர். அனைவரிடத்திலும் எளிமையாக பழகக்கூடியவர், ஆடம்பரம் இல்லாதவர், அனைவரும் எளிதில் அணுகக் கூடியவராக இருந்தவர். ஏழை மாணவர்களின் கல்விப்பயில உதவியவர். பெருமளவில் தன்னை நாடி வந்த அனைவருக்கும் கல்விக்கட்டணத்தை முழுமையாக செலுத்தி அவர்களின் வாழ்வில் கல்விக்கண் திறந்தவர். உண்மையும், உழைப்பும் இருந்தால் வாழ்க்கையில் உச்சம் தொடமுடியும் என்பதை நிரூபித்தவர். கடின உழைப்பு, பணியில் நேர்மை, தொழிலில் ஈடுபாடு என ஆர்வமுடன் பணி ஆற்றிய அவர் படிப்படியாக உயர்ந்து தொழிலதிபர்–சமூகசேவகர்–கொடையாளர் என பன்முகம் கொண்டவராக வாழ்ந்து மறைந் தவர். தனி முத்திரைப் பதித்த ஐயா அவர்களின் பெயரும் புகழும் என்றென்றும் நிலைத்து நிற்கும்” என்றார்.

சங்கச்செயலாளர் திரு.C.ராஜேந்திரன் அவர்கள் பேசும்போது, “தன்னுடைய உழைப்பால் இடைவிடாத முயற்சியால் படிப்படியாக உயர்ந்தவர் ஐயா KRT. சமுதாயத்தில் சாதாரண நிலையில் இருக்கும் ஏழைகளுக்கு நல்லது செய்யும் அவரின் தன்னலமற்ற செயல்பாடுகளால் இன்றும் நம் நினைவில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார். இவரது சிறப்பு குணம் பகைவர்களையும் மதிக்கும் பண்பாளர். படிக்காத மேதையாக மனித நேயத்தின் மறுஉருவமாக திகழ்ந்தவர். எதார்த்தவாதி. அவர் காலத்தில் நாம் வாழ்ந்தது நமக்கெல்லாம் பெருமையை தருகிறது. இன்றைய வளரும் இளம் தலைமுறையினர் அவரது வாழ்க்கையை முழுமையாக அறிந்து கொண்டு வாழ்வில் முன்னேற வேண்டும். அதுவே நாம் அவருக்கு செலுத்தும் மரியாதையாகும்” என்றார்.

நிறைவாக வருகைதந்த நிர்வாகிகள் அனைவரும் மலரஞ்சலி செலுத்தியவுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

# சுவையான செய்திகள்

## பேரழகு ஆடை!

இந்திராகாந்தி பிரதமராக இருந்த காலம் அது. மும்பை நேரு விஞ்ஞான மையத்தில் அப்துல் காலம் உரையாற்றிக்கொண்டு இருந்தார். அப்போது எஸ்.எல்.வி. செயற்கைக்கோளை வெற்றிகரமாகச் செலுத்தி இருந்தனர். நேரு விஞ்ஞான மையத்தில் இருந்த கலாமை அழைத்த இஸ்ரோ தலைவர் தவான், ‘‘பிரமர் உங்களைச் சந்திக்க விரும்பு கின்றார். நாம் இருவரும் அவரைச்சென்று பார்ப்போம்’’ என்று அழைக்க, ‘‘நான் சாதாரண சட்டை அணிந்துள் ளேனே? என்று கலாம் தயங்கினார். ‘‘உடையைப்பற்றி கவலைப்படாதீர்கள், வெற்றி என்ற பேரழகான ஆடையை நீங்கள் அணிந்துள்ளீர்கள்’’ என்று கூறி பிரதமரைச் சந்திக்க கலாமை அழைத்துச் சென்றார் தவான்.

## சாஸ்திரியின் தமாஷ்!

ஒருமுறை குழந்தைகள் விழா ஒன்றில் கலந்து கொள்ளும்படி லால்பகதூர் சாஸ்திரியை அழைந்திருந்தார்கள். அவரும் கலந்து கொண்டார். குழந்தைகள் குழுமியிருந்த கூட்டத்தில் தமது பேச்சை தொடங்கிய அவர், ‘‘உங்களைப் போல இருக்கும் எனது சிறிய உருவத்திற்காகத்தான் என்னை இந்த விழாவில் கலந்துகொள்ள அழைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்’’ என்றார். அவரது பேச்சை கேட்டம் கூட்டம் கலகலப்பானது.

## திருமலை நாயக்கர் ரகசியம்

‘திருமலை நாயக்கர்’ என்ற வரலாற்று நாடகம் மதுரையில் நடந்தது. அண்ணாமலை பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆறு. அழகப்பன் எழுதிய இந்த நாடகத்தில் திருமலை நாயக்கராக ஹெரான் ராமசாமி நடித்தார். நாடகத்தை ரசித்துப் பார்த்த மீனாட்சி அம்மன் கோவில் தக்கார் வி.என்.சிதம்பரம் ஹெரான் ராமசாமியை பாராட்டியதுடன், ‘‘நாளை அதிகாலை வேளை பூஜைக்கு இதே திருமலை நாயக்கர் வேடத்திலேயே வந்து விடுங்கள்’’ என்று ஒரு வேண்டுகோளையும் வைத்தார். அதன்படி மறுநாள் ஹெரான்ராமசாமியும் திருமலை நாயக்கர் வேடத்தில் வந்தார். கோவிலுக்கு வந்த பக்தர்களுக்கு ஒரே பிரமிப்பு. திருமலை நாயக்கரே மீண்டும் உயிர்பெற்று வந்து மீனாட்சியை வணங்குகிறாரோ என்ற பிரமை அவர்களுக்குள் எழுந்தது. ‘‘அசல் திருமலை நாயக்கரே உயிர்பெற்று வந்து அன்னையை வழிபடுவது போன்றதொரு பிரமை சுற்றிலும் இருந்தவர்களுக்கு மட்டுமல்ல, எனக்கும் தோன்றி ஆனந்தக் கண்ணீரை வரவழைத்தது என் வாழ்வில் மறக்கமுடியாத சம்பவம் இது’’ என்று வி.என்.சிதம்பரம் குறிப்பிட்டார்.

**“கடிந்து கொண்டபின் தட்டிக் கொடுப்பது, கடுங்குளிருக்கும் பின்வரும் வெயில் போல இதமானது”**

## அன்பு எனும் ஆயுதம்

ஒருசமயம் அன்னை தெரசா அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார். நியூஜெர்சி விமான நிலையத்தில் இருந்து வெளியே வருவதற்கு முன்பு சோதனையிடும் இடத்துக்கு அவர் சென்றார். சோதனை அதிகாரி, ‘‘ஆயுதம் எதுவும் வைத்திருக்கிறீர்களா?’’ என எல்லோரிடமும் கேட்பதுபோல் தெரசாவிடமும் கேட்டார். ‘‘ஆம். இருக்கிறது’’ என்றார் தெரசா. அதைக் கேட்ட அதிகாரி திகைத்து விட்டார். ஒரு நிமிடம் யோசித்த அவர், ‘‘ஆயுதங்களா?’’ என்று அழுத்திக்கேட்டார்.அதற்கு தெரசா,‘‘ஆம்.. ஆயுதங்கள் தான். பையில் எனது பிரார்த்தனைக்கான புத்தகங்கள் சில இருக்கின்றன. மனதில் பிறருக்காக ஏராளமான அன்பு இருக்கிறது’’ என்றார்.

## வசூலிப்பது யார்?

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் சுதந்திரப் போராட்ட வீரரும், கவிஞருமான கே.ஏ. அப்பாஸ், இளைஞர்கள் சிலருடன் சேர்ந்து பொதுத்தொண்டுக்காக நிதி திரட்டினார். நகரத்தில் உள்ள முக்கியப்பிரமுகர்களிடம் நிதி வசூலித்துவிட்டு மாகாண கவர்னர் மால்கம் ஹெய்லியை சந்திக்கச் சென்றனர். அவரிடம் தாங்கள் வந்திருக்கும் நோக்கத்தைக் கூறினர். உடனே, ‘‘உங்களுக்கு ஆங்கியேர்களை கண்டாலே பிடிக்க வில்லை. எங்களை அடித்து விரட்டப் பார்க்கிறீர்கள்! இதற்கு மட்டும் என்னிடம் வரலாமா?’’ என்று மால்கம் கிண்டலாக கேட்டார். அவரிடம் இருந்து எதிர்பாராத இந்தக் கேள்வியைக் கேட்டு இளைஞர் கூட்டம் திகைத்தது. ஆனால் அப்பாஸ் தயங்காமல், ‘‘நாங்கள் உங்களிடம் இனாம் பெற வரவில்லை. நீங்கள் எங்களிடம் பெறும் பணத்தில் ஒரு பகுதியை திரும்பப் பெறத்தான் வந்தோம்’’ என்று கம்பீரமாகச் சொன்னார். கவர்னர் எதுவும் பேசாமல் நூறு ரூபாய் எடுத்துக் கொடுத்தார்.

## ‘நச்’ பதில்!

இந்தியாவின் மத்திய அசெம்பிளியில் விவாதம் நடந்தது. அதில் தீரர் சத்தியமூர்த்தி உறுப்பினராக இருந்த சமயம் அது. அப்போது ஓர் ஆங்கிலேய உறுப்பினர், ‘‘சூரியன் எப்பொழுதும் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தை நாங்கள் பெற்றிருக்கிறோம்’’ என்று கூறி மிகவும் பெருமைப்பட்டுக்கொண்டார். அதைக் கேட்ட சத்தியமூர்த்தி, ‘‘ஆமாம், இருட்டிலே பிரிட்டிஷ்காரர்களை விட்டு வைக்க கடவுளுக்குக்கூட நம்பிக்கை இல்லை’’ என நச்சென்று பதிலளித்தார்.

### சத்தான உணவு

**எல்லா நொறுக்குத் தீனிகளையும் குறைத்து விட்டு தினமும் உணவில் காய்கறிகள் மற்றும் பழங்களின் அளவைக் அதிகரிக்கவும் இதனால் உடலில் புத்துணர்ச்சியையும் மனநல உற்சாகமும் அதிகமாகும்.**

## மிகவும் சூடாக டீ குடிப்பதால் உணவுக்குழாய் கேன்சர் வரும் ஆபத்து!..

**மருத்துவப் பகுதி**



மிகவும் சூடாக குடிப்பதால் உணவுக்குழாய் கேன்சர் வரும் ஆபத்து அதிகமாக இருக்கிறது என்று இந்திய மருத்துவ நிபுணர்கள் மேற்கொண்ட ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு முடிவை சர்வதேச நிபுணர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

காபி டீ மற்றும் சில வகை பானங்களை சூடாக சாப்பிடுவதை பலரும் விரும்புகின்றனர்.

சிலர்தான் நன்றாக சூடு ஆறிய பின் குடிக்கும் பழக்கம் கொண்டுள்ளனர். இது வகையில் உடலுக்கு மிகவும் நல்லது என்று தெரிகிறது.

தென் மாநிலங்களில் குறிப்பாக தமிழ்நாட்டில் தான் காபி குடிக்கும் பழக்கம் பரவலாக உள்ளது. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை எடுத்துக் கொண்டால் எவருமே டீ குடிப்பதை தான் விரும்புகின்றனர்.

அதிக சூடாக குடிப்பதால் ஏற்படும் உடல் கோளாறு பற்றி கடந்த சில ஆண்டாக மேற்கொண்டு வந்த ஆய்வில் இந்திய நிபுணர்கள் ஆபத்தான சில உண்மைகளை கண்டு பிடித்துள்ளனர்.

**ஆய்வு முடிவுகளில் அவர்கள் கூறியிருக்கும் சில தகவல்கள்:**

வாய் முதல் இரைப்பை வரை உள்ள உணவுக்குழாய் மிகவும் மிருதுவானது குறிப்பட்ட அளவில் தான் சூட்டை அது தாங்கும். அதிகமானால் அதன் சுவர் அரிக்கத் துவங்கிவிடும்

அதிகமான சூட்டுடன் டீ குடித்தால் உணவுக்குழாய் சுவர்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றன. அதன் சுவர்கள் அரிக்கப்பட்டு திசுக்கள் பலவீனம் அடைகின்றன.

இதனால் சுவர்ப்பகுதியில் உணவுக்குழாய் கேன்சர் கட்டி ஏற்படும் ஆபத்து உள்ளது. மற்றவர்களை விட சில பழக்க வழக்கங்களை கடைபிடிப்பவர்களுக்கு கேன்சர் ஆபத்து அதிகம்.

பான்பராக் புகையிலை போன்றவற்றை சுவைப்பவர் களுக்கு 1.1 மடங்கு கேன்சர் வாய்ப்பு அதிகம் பீடி குடிப்போருக்கு 1.8 மடங்கு கேன்சர் அபாயம் உள்ளது.

சிகரெட் பிடிப்போருக்கு இரண்டு மடங்கு கேன்சர் அபாயம் உள்ளது. மது குடிப்போருக்கு கேன்சர் அபாயம் 1.8 மடங்கு.

அதிக சூட்டுடன் டீ குடிப்போருக்கு கேன்சர் வரும் வாய்ப்பு இவர்களை விட நான்கு மடங்கு அதிகமாக உள்ளது.

வெயில் பருவத்தை விட குளிர்காலத்தில் குளிர் பிரதேசத்தில் உள்ளவர்கள் சூடாக டீ குடித்தால் அவர்களுக்கு இந்த வாய்ப்பு அதிகம்.

சூடான பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு ஓரளவு பாதிப்பு வாய்ப்பு குறைவு தான்.

இவ்வாறு ஆய்வு முடிவுகளில் தெரிய வந்துள்ளது.

அதிக சூடாக டீ குடித்தால்தான் கேன்சர் வரும் அதிக சூடாக காபி குடித்தால்..? இப்படி காபி குடிப்பவர்களுக்கு கேன்சர் வாய்ப்பு அதிகரித்ததே இல்லை என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

மும்பையில் உள்ள டாடா நினைவு மருத்துவமனை நிபுணர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இவர்களின் ஆய்வு முடிவுகளை சர்வதேச நிபுணர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

டாடா நிபுணர்கள் தங்கள் ஆய்வுக்கு காஷ்மீரில் 1,500 பேரிடம் சர்வே எடுத்துள்ளனர். அவர்களில் அதிக சூடாக டீ குடிப்போருக்கு கேன்சர் ஆபத்து உள்ளதை உறுதி செய்தனர்.

ஆண்டுக்கு இப்படிப்பட்டவர்களிர் சராசரியாக 800 பேருக்கு கேன்சர் வருவதும் தெரியவந்துள்ளது. அமெரிக்காவிலிருந்து வெளிவரும் சர்வதேச கேன்சர் ஆராய்ச்சி இதழ் இன்டர்நேஷனல் கேன்சர் எபிமாடலஜியில் இந்த ஆய்வு முடிவுகள் வெளி வந்துள்ளன.

## கப்பலே கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்காதே

